**கவனிக்க**.-2022.07.22 ஆந் திகதிய 2290 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, (தமிழ் மொழிலேம்) மற்றும் பகுதி III, பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2291 - 2022 ජූලි මස 29 වැනි සිකුරාදා - 2022.07.29**

*2291 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 224 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**கவனிக்க**.- (i) நொத்தாரிசு (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) அற்றோணித் தத்துவம் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) ஆவணங்களைப் பதிவுசெய்தல் (திருத்தம்) சட்டமூலம் 2022, யூலை 15 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2022, ஓகத்து மாதம் 19 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, ஓகத்து மாதம் 05 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


223 - B 082367 - 353 (2022/07)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்ளம்

இணைப்பு - 09

### காணி அபிவிருத்திக் கட்டளை சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) பற்றிய அறிவித்தல்

வடமேல் மாகாண சபையின், குருநாகல் மாவட்டத்தில், குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் டி. எம். ஏ. கே. திசாநாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பந்தியின் கீழ் மாண்புமிகு சனாதிபதியால் 1984.02.23 ஆம் திகதி அளிப்புச் செய்யப்பட்டுள்ள இலக்கம் කුරු/ප්‍ර/07416 கொண்ட அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான குளியாப்பிட்டிய, எம்பவ வதிவிடத்தைக் கொண்ட லங்கா ஹலுகே எளிசம்மா என்பவருக்கு அளிப்புச் செய்து குளியாப்பிட்டிய மாவட்ட பதிவாளர் காரியாலயத்தின் இலக்கம் කුලි/ලේ/5/68 இன் கீழ் 1985.07.22 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழ்வரும் உப அட்டவணையில் காணப்படும் காணிக்கு பின் உரித்தாளர் ஆவதற்கு சட்ட ரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாது போனால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்தாலும் அவர்/அவள் பின் உரித்தாளர் ஆவதற்கு விரும்பாததால், பின் உரித்தாளர் ஆவதற்கு ஒருவரேனும் முன்வரவில்லை என அறியப்பட்டுள்ளதால் குறிப்பிடப்பட்ட அளிப்புப் பத்திரத்தை உரிய சட்டத்தின் 104 வது பந்தியின் கீழ் இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது என்பதை இத்தால் அறிவிக்கிறேன். இது தொடர்பாக ஏதாவது எதிர்ப்புகள் இருந்தால் அதனை எனக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட வேண்டும்.

#### குறிப்பிட்ட உப அட்டவணை

குருநாகல் நிர்வாக மாவட்டத்தில் குளியாப்பிட்டிய மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் கடுகம்பல வடக்கு கோரளையில் 430 கபலேவ கிராம உத்தியோகத்தர் பிரிவில் எம்பவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான, நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தினால் தொகுக்கப்பட்ட இலக்கம் 5 கொண்ட வெளிக்களப் பத்திரத்தில் இலக்கம் 2208 கொண்ட துண்டாக்குதல் வரைபடத்தில் இலக்கம் 516 கொண்ட காணித்துண்டாக காட்டப்பட்டுள்ளதுமான அளவில் ஹெக்ரயர் 0.254 அளவினதுமான கீழ் வரும் விதத்தில் எல்லை உடையதுமான அரச காணி மாவி அகாரே மூக்கலான.

வடக்கு : துண்டு இலக்கம் 515 பிரவேச பாதை;
கிழக்கு : துண்டு இலக்கம் 515 பிரவேச பாதை;
தெற்கு : துண்டு இலக்கம் 24;
மேற்கு : துண்டு இலக்கம் 517.

டீ. எம். ஏ. கே. திஸாநாயக்க,
பிரதேச செயலாளர்/பிரதிகாணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கிடையில்)

07 - 552

---

இணைப்பு - 09

### காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட வழங்கல் பத்திரத்தை இரத்து செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பரன அறிவித்தல்.

மேல் மாகாண சபை, கம்பஹா மாவட்டம், மீரிகமை பிரதேச செயலகப்பிரிவின் பிரதேச செயலாளர்/ பிரதி காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடையே) டப்ளிவ். பி. பி. இந்திக்க ஆகிய நான் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19 (4) உப பிரிவின் கீழ் மாண்புமிகு சனாதிபதி அவர்களால் 1996.02.26 ஆம் திகதி கம்/பிர/மீரி/1095 இலக்கத்தை உடைய வழங்கல் பத்திரம் நெவ்கலையை சேர்ந்த ஹக்குருகும்புருகே ஜேமிஸ் என்பருக்கு வழங்கப்பட்டு பதிவு செய்யப்படாமல் இருக்கும் கீழே உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிக்கு பின் உரித்தாளி ஆவதற்கு சட்டப்படியான உரித்தாளி ஒருவர் இல்லாமை அல்லது பின் உரித்தாளி ஒருவர் இருந்தும் அவர் சட்டப்படியான உரித்தாளி ஆவதற்கு விரும்பாமை காரணமாக இக்காணிக்கு பின் உரித்தாளி ஒருவர் இல்லை என அறிய வருவதால் குறிப்பிட்ட காணியின் வழங்கல் பத்திரத்தை மேற்படி கட்டளைச் சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதை இத்தால் அறியத் தருகிறேன். இது தொடர்பாக எதிர்ப்புக்கள் ஏதேனும் இருப்பின் அதனை .. திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக எனக்கு அறிவித்தல் வேண்டும்.

**உப அட்டவணை**

கம்பஹா நிர்வாக மாவட்டம், மீரிகமை பிரதேச செயலகப் பிரிவில் உடுகஹ பத்துவ/கோரளை 22 நெவ்கலை கிராம சேகவர் பிரிவில் நெவ்கலை என்ற ஊரில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தின் பொறுப்பில் உள்ள மற்றும் நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இல.../... என்ற களப்பத்திரத்தில்/ பீ. பீ. ஏ 147 எனும் காணித்துண்டாக்கல் பிரித்தெடுப்பில்/ இல/ .../ எனும் காணித்துண்டாக காட்டப்பட்டுள்ள ஹெக்டயர்/01 ஏக்கர்/../றூட்/39 பேர்ச் பரப்பளவு உடைய பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ள அரச காணி.

வடக்கு : போமலுவ வத்தை;
கிழக்கு : கே. டி. பொடி சிஞ்ஞோவின் காணி;
தெற்கு : எம். பி. தெப்பானிஸின் காணி;
மேற்கு : விலிக்குல கந்தை.

டப்ளிவ். பி. பிரசாத் இந்திக்க,
பிரதேச செயலாளர்/
பிரதி காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடையே)

மீரிகமை,
2022, சனவரி 06.

07 - 658

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.